செ.வெ.எண்: 67 / ஜூலை / 2021 நாள்:19.07.2021

# செய்திக் குறிப்பு

அரசு மருத்துவமனைகளில் தற்காலிகப் பணிநியமனம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலன்கருதி கொரோனா நோய்த் தடுப்புப் பணிகளுக்காக மருந்தாளுநர்கள் 15 பணியிடம் ஆய்வக நுட்புநர்கள் 15 பணியிடம் மற்றும் நுண்கதிர் வீச்சாளர் 15 பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக ஆறு மாதங்களுக்கு மாதம் ரூ.12,000/- வீதம் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்கண்ட பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. ஆறு மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நிரப்பப்படவுள்ளன. இப்பணியிடங்கள் பணிவரன்முறை செய்யப்படவோ அல்லது நிரந்தம் செய்யப்படவோ மாட்டாது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கல்வித்தகுதி** :

மருந்தாளுநர்கள் - தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் இரண்டு ஆண்டு பட்டயபடிப்பு படித்திருக்க வேண்டும் தமிழ்நாடு மருந்தாளுநர் கவுன்சிலிங்கில் பதிவு செய்து இருக்க வேண்டும் மற்றும் நாளது தேதிவரை புதுப்பித்து இருக்க வேண்டும்

ஆய்வக நுட்புநர்கள் - தமிழக அரசு/ தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இரண்டு ஆண்டு பட்டயபடிப்பு படித்திருக்க வேண்டும்.

நுண்கதிர் வீச்சாளர்கள் - தமிழ்நாடு மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள மருத்துவம் சாரா கல்வி அமைப்பின்படி நடத்தப்படும் / அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இரண்டு ஆண்டு கதிரியக்கம் மூலம் நோய் கண்டறிதலுக்கான பட்டயப்படிப்பு படித்திருக்க வேண்டும்

விண்ணப்பிக்க கடைசித் தேதி : 26.07.2021 பிற்பகல் 05.00மணி அதன்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நேர்காணல் நடைபெறும் நாள் : 29.07.2021 காலை 10.00 மணி

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகம், எண். 4,வ.உ.சி ரோடு, ரோசன் மஹால் அருகில், மத்திய பேருந்து நிலையம் பின்புறம், திருச்சிராப்பள்ளி-620 001. தொலைபேசி எண். 0431 2414069, நேர்காணல் நடைபெறும் இடம். :கூட்ட அரங்கம் 3வது தளம், மாவட்ட ஆட்சித்தலைவர்அலுவலகம், திருச்சிராப்பள்ளி.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**